# இலக்குவனார் புகழ் வளர்க, வாழ்க!

- பாவலர் பட்டுக்கோட்டை இராசேந்திரன்

நலக்குறைவு தமிழுக்கு வரக்கூடா தென்ற
  நினைவோடு வாழ்ந்திருந்த பெருமகனார்; மேனி
பலக்குறைவு கண்டாலும், தமிழ்ப்பாது காப்பைப்
  பேணுகின்ற கழகமொன்று கண்டஅறி வாளர்;
கலக்கிடுவார் தமிழ்த்தாயைப் பழிப்பாரை; மேலும்
  'குறள்நெறி'என் றோர்ஏடும் நடத்திவந்தார் எங்கள்
இலக்குவனார்; தஞ்சைவள நாடீந்த செம்மல்
  ஈரோட்டுப் பாதையிலே நடந்தமிழ் மேதை!

தமிழ்இலக்கி யத்தில்கரை கண்டபுகழ் கொண்டார்!
  திருவெறும்பூ ரில்,பெரியார் ஈரோட்டில் எல்லாம்
தமிழ்ப்பேரா சிரியர்பணி புரிந்துவந்தார்; பின்னர்,
  தென்பாண்டி மதுரை,நாகர் கோயிலிலே எல்லாம்
அமைந்துள்ள கல்லூரி களில்திகழு கின்ற
  அரியதமிழ்த் துறைத்தலைவர் பொறுப்பேற்றார்; தாயாம்
தமிழ்அழிய இந்திவர விடமாட்டேன் என்ற
  திடமனத்தால் பலவழக்கைச் சந்தித்தார்; வென்றார்!

முனைவர்பட்டம் பெற்றஇவர் தலைநகராம் சென்னை
  மாநிலக்கல் லூரியிலே தமிழாசான் ஆனார்;
தனைவளரச் செய்திட்ட தமிழ்வளர்க்க வேண்டித்
  'தமிழ்உரிமைப் படை'அமைத்துக் கைதான துண்டு!
கனைகடல்போல் முழங்குதமிழ்ப் பேச்சாள ரான
  கலைஞர்,திரு வாரூரில் இவர்நன்மா ணாக்கர்!
'எனைவெல்வார் யாருமில்லை' எனும்கர்வம் இல்லை;
  இருந்ததெல்லாம் நெடுந்தோற்றம்; நீள்சதுர மீசை!

வாழ்வாங்கு வாழவேண்டும் தமிழ், தமிழர் என்னும்
  மேலான நோக்குடைய இலக்குவனார் உள்ள
கீழ்த்திசைநா டுகளோடு மலேயாசிங் கப்பூர்க்
  கெல்லாம்போய்த் தமிழில்சொற் பொழிவாற்றி வந்தார்;
ஆழ்புலமை மிக்கார்; இலக்கணத்தில் நல்ல
  ஆற்றலாளர்; மொழிஇயல்ஆய் வாளர்இவர் ஆவார்!
வீழ்ந்தமிழ் நாட்டவரைத் தலைநிமிரச் செய்த
  பெரியாரின் சீடர்இவர்; புகழ்வளர்க, வாழ்க!

## தமிழ் எழுத்தாளர் கழகம்

நடத்தும்

## கவியரங்கம் - கருத்தரங்கம்

*21.11.2000 செவ்வாய் மாலை 5-30 மணிக்கு சென்னை மாவட்ட (தேவநேயப் பாவாணர்) மைய நூலகக் கருத்தரங்க அறையில்,*

*கவியரங்கத் தலைப்பு :* **வீட்டுக்கோர் புத்தக சாலை**

*கருத்தரங்கத் தலைப்பு:* **எழுத்தாளர்களும் பதிப்புத்துறையும்**

*வரவேற்புரை : கவிக்கொண்டல்* **மா.செங்குட்டுவன்**

*கருத்தரங்கத் தலைமை: டாக்டர்* **புரட்சிதாசன்**

*கவியரங்கத் தலைமை: கவிஞர்* **இளமாறன்**

*சிறப்பு விருந்தினர் :* **'குழந்தைகள் உலகம்' ஏ.ஜி.எஸ்.மணி**

கவிஞர்களும் எழுத்தாளர்களும் கலந்துகொண்டு
சிறப்பிக்க வேண்டுகிறோம்.

*நிகழ்ச்சிப் பொறுப்பாளர்கள்:*

**கடலூர் அ.தேவநாதன்,**
**பாவலர் இடிமுரசார்**